# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 23 புதன்கிழமை (09-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 235


### படையினரிடம் கடலில் பிடிபட்ட

## 109 தமிழ் அகதிகள் அரச அதிபரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஒக். 9

மன்னார் வலைப்பாட்டில் இருந்து தமிழ் அகதிகளுடன் இந்தியா சென்று கொண்டிருந்த படகு ஒன்று இலங்கை கடற்படையினரிடம் சிக்கி உள்ளது.

கடந்த சனிக்கிழமை நடுக்கடலில் வைத்து இந்தப் படகு பிடிபட்டது.

கடந்த திங்கட்கிழமை 105 பேருடன் மற்றும் ஒரு படகு இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்டது தெரிந்ததே.

கடந்த சனிக்கிழமை பிடிபட்ட 109 பேரும் இரு இந்திய படகோட்டிகளும் மன்னார் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர் பொலீஸார் இவர்களை மன்னார் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இவர்கள் அனைவரும் மன்னார் அல். அசார் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

இவர்களை மன்னார் நீதிவான் மு திருநாவுக்கரசு, பதிவாளர் சி. எஸ். பெர்ணான்டோ ஆகியோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

பொருளாதாரப் பிரச்சினை, வறுமை, உண்ண உணவின்மை மற்றும் மருத்துவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவில தடுப்பு முகாமிலிருந்தவர்களில் 32 தமிழ் இளைஞர்கள் விடுவிப்பு!

### சரீரப் பிணையில் செல்ல நீதிபதி அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகி வீரவில தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளோரில் 32 இளைஞர்கள் நேற்று முன்தினம் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு அருள்சாகரன் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை 25 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் அனுமதித்த நீதிபதி, ஒவ்வொரு மாதமும் முதல் வரும் ஞாயிற்றுக் கிழமையில், காலை 8 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் அருகில் உள்ள பொலீஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் பிணையில் விடுதலையான 32 இளைஞர்களினதும் விவரம் வருமாறு:

★ செ. ஜெயரூபன் — தெல்லிப்பழை

★ க. பிரேமதாசன் — புத்தூர்.

★ ம. மகேஸ்வரன் — நல்லூர்,

★ ப. புகதீஸ்வரன் — மட்டுவில்.

★ அ. வாசன் — புத்தூர்.

★ சி.சுதர்சன் — மட்டுவில்.

★ த ராஜ்குமார் — புன்னாலைக்கட்டுவன்.

★ த. ராஜ்கண்ணன் — புன்னாலைக்கட்டுவன்.

★ ம. மணிவண்ணன் — புன்னாலைக்கட்டுவன்.

★ செ. சிவநேசன் — பலாலி.

★ க. யோகலிங்கம் — அச்செழு

★ ம. அந்திவண்ணன் — புன்னாலைக்கட்டுவன்.

★ சி. பத்மதாசன் — புத்தூர்.

★ ஞா. கஜீகரன் — நீர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தற்கொலைப் படையாளியைத் தேடி கொழும்பைத் துருப்புகள் சல்லடை!

## நகரின் வீதிகளை மூடித் தேடுதல்

கொழும்பு, ஒக்டோபர் 9

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையாளி ஒருவர் பாதுகாப்புத்தடைகளை ஊடுருவி கொள்ளுப்பிட்டிப் பகுதிக்குள் நுழைந்து விட்டார் என்று பொலீஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து நேற்றுக் கொழும்பில் துருப்புகள் பெரும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தற்கொலைப் படையாளி பற்றிய தகவல் கிடைத்தவுடன் நகரப்போக்குவரத்துப் பொலீஸார், கொள்ளுப்பிட்டிச் சந்தியில் இருந்து ஆர். டி. மெல் மாவத்தை, நவம் மாவத்தை, றொட்டடாம் கார்டின், தனபால மாவத்தை, அக்பர் மாவத்தை ஆகியவற்றில் போக்குவரத்துக்களைத் தடைசெய்தனர்.

சல்லடை போட்டு துருப்புக்கள் இப்பகுதியில் நடத்திய தேடுதலின் போது விசாரணைக்காக பலர் தடுத்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தணிக்கை நீக்கப்பட்டது

யுத்த செய்திகள் மீதான தணிக்கை நீக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த இதனைத் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டை அரச படைகள் கைப்பற்ற நடவடிக்கை மேற்கொண்ட போது இந்தத் தணிக்கை அமுலாக்கப்பட்டது.

குடாநாட்டை அரச படைகள் கைப்பற்றிய பின்னரும் வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் எதிர்ப்பின் மத்தியிலும் இந்தத் தணிக்கை நடைமுறையில் இருந்து வந்தது.

ஊழல்களையும் இராணுவத்தின் இயலாத் தன்மையையும் மறைக்கவே தணிக்கை முறை கொண்டு வரப்பட்டது என்று உள்நாட்டு வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் குற்றஞ் சாட்டி வந்தன.

(இ-3-10)

### புலிகள் இயக்கத்தை

## பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவிக்கும்

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 9

விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு பயங்கர வாத அமைப்பாக அறிவிக்க அமெரிக்காஇணங்கியிருப்பதாக நீதி விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் அமெரிக்காவில் இருந்து கொழும்பு திரும்பியபின்னர் இதனைத் தெரிவித்தார்.

அப்படி அறிவிக்கப்படும் பட்சத்தில் வெளி நாடுகளில் நிதி சேகரிக்கும் விடுதலைப் புலிகளின் முயற்சியை அமெரிக்கா தடுக்கும் என்றும்—

வெளிநாடுகளில் உள்ள புலிகளின் வங்கிக் கணக்குகள் இயங்க முடியாமல் செயல் இழக்க வைக்கப்படும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

## நாடு மிக மோசமான நெருக்கடி நிலையில்

### கத்தோலிக்க மாநாடு அறிக்கை

கொழும்பு, ஒக். 9

நாடு இன்று மிக மோசமான நெருக்கடி நிலையில் உள்ளது. இந்த அபாயகரமான நெருக்கடி நிலையில் இருந்து நாட்டைப் பாதுகாக்க அரசாங்கத் தலைவர்களும் மற்றும் ஆயுதம் தாங்கிய தீவிரவாத இளைஞர்களும் முன்வர வேண்டும். இந்த வகையில் பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐ. தே. கவும் தமக்குள்ளிருக்கும் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமை உணர்வு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக்கு விஜயம் செய்யுமாறு எதிர்க்கட்சிக்கு மீண்டும் அழைப்பு

### தாமும் கூடவரத் தயார் என்கிறார் அனுருத்த

கொழும்பு, ஒக். 9

எதிர்க்கட்சியினர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை நேரில் பார்வையிடவேண்டும்.

இப்படி பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தை எதிர்க்கட்சியினருக்கு மீண்டும் அழைப்பு விடுத்தார்.

இராணுவச் செய்தி பற்றிய தணிக்கை நீக்கப்பட்டுவிட்டதாக நாடாளுமன்றத்தில் அறிவிக்கையிலேயே அவர் இந்த அழைப்பையும் விடுத்தார்.

தற்போது தணிக்கை நீக்கப்பட்டுவிட்டதால் எதிர்க்கட்சியினர் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கு விஜயம் செய்ய முடியும். தேவை என்றால் அவர்களுக்குப் பாதுகாப்பாக நானும் அவர்களுடன் வரத் தயார்.

இப்படி அனுருத்தரத்வத்தை கூறினார்.

இதற்கு முன்னரும் இதே போன்ற அழைப்பை அனுருத்த ரத்வத்தை எதிர்க்கட்சியினருக்கு விடுத்திருந்தார்.

இராணுவச் செய்தி தொடர்பான தணிக்கையை அரசு நீக்கினால் அழைப்பை ஏற்பதாக அப்போது ஐ.தே.க.வின் செயலாளர் காமினி அத்துக்கோறளை பதில் அளித்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மன்னார் மீனவருக்கு நிவாரணம் வழங்க பணிப்பு

கொழும்பு, ஒக். 9

மன்னார் மற்றும் யாழ். குடாநாட்டில் மீனவர்கள் கடலுக்கு சென்று மீன் பிடிக்க படையினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதால், அப்பகுதியில் உணவு நிவாரணம் தேவைப்படும் மீனவர் குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு வடமாகாண புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் சோமபால குணதிர சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 3 ஆயிரம் மீனவக் குடும்பங்களும் —

யாழ். குடாநாட்டைச் சேர்ந்த ஆயிரத்து 950 மீனவக் குடும்பங்களும் — உணவு நிவாரணம் பெற உள்ளன-

வாரமொன்றுக்கு நபர் ஒருவருக்கு 83 ரூபா வீதம் 5 பேர் அடங்கிய குடும்பத்துக்கு 315 ரூபா பெறுமதியான உணவு நிவாரணம் வழங்கப்படும்.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி விவேகானந்தரின்
# யாழ். விஜய நூற்றாண்டு

முன்னோடி நிகழ்ச்சி — கருத்தரங்கு

இடம்: ஹாட்லிக் கல்லூரி (உயர்தரவகுப்பு மாணவர்களுக்கு)

காலம்: **9 - 10 - 96** புதன்கிழமை காலை **8 30**மணி (பழைய நேரப்படி)

தலைவர்: திரு. க. நடராசா, அதிபர்.

உரை: சுவாமி சித்ருபானந்தா

பொருள்: விவேகானந்தரின் சிந்தனைகள் (Silent Communication)

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை (43100)

# பிள்ளையார் இன்டஸ்ரீஸ்

148 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளையார் அப்பளப் பிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள். மேல் உறையில் மேற்படி விலாசம் இருக்கிறதா என்பதைப் பார்த்து வாங்கவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

தயாரிப்பாளர்
வே. கோபாலன்

(8905)

# கண்ணீர் அஞ்சலி

## திரு சி. இராஜரட்ணம் அவர்கள்
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

எமது கல்லூரியின் பழைய மாணவியாக, ஆசிரியையாக, உப அதிபராக, அதிபராக விளங்கி ஓய்வுபெற்ற

திருமதி யோகலட்சுமி இராஜரட்ணம்

அவர்களின் அருமைக் கணவர் கனடாவில் காலமான செய்தி கேட்டு மனம் வருந்துகின்றோம்.

அன்னாரின் துணைவியாருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழையமாணவர் சங்கம்.

யா/ இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (சி/3257)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



திருமதி
## சிவப்பிரகாசம் இரத்தினம்மா
(புன்னாலைக் கட்டுவன் வடக்கு)

மலர்வு: **14 – 02 – 1917**
உதிர்வு: **09 – 09 – 1996**

அமரர் சிவப்பிரகாசம் இரத்தினம்மா அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு இன்று (09 - 10 - 96) ஈவினையில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திருநந்தலம்
ஈவினை மத்தி,
புன்னாலைக்கட்டுவன். (43103)

# சமய சந்நிதிகளில்

நல்லூர் சிவன் கோவிலில் நடைபெறவுள்ள சாரதா நவராத்திரி விழாவை முன்னிட்டு —

இன்று காலையில் கணபதி ஹோமமும் மாலையில் நவக்கிரக மகமும் நடைபெறும்.

விசேட ஹோமங்களும் பூசைகளும் விஜயதசமி தினம் வரை — 13 நாள்களுக்குத் தொடர்ந்து — நடைபெறும். (அ-30)

## சிமெந்து ஊழியர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக். 9

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களின் ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவு இன்று புதன்கிழமை காலை 9.00 மணி முதல் யாழ். வர்த்தக வங்கியில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தமிழ்நாட்டில் உள்ளாட்சி தேர்தல்

சென்னை, ஒக். 9

சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ் நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதல் கட்டத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. இன்றைய தேர்தலில் சுமார் 1 கோடியே 89 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

உள்ளாட்சித் தேர்தல் வாக்குகள் 14 ஆம் திகதி எண்ணப்படும். அன்று மாலையே முடிவுகள் வெளிவரத் தொடங்கும் என தமிழக தேர்தல் ஆணையாளர் மலைச்சாமி தெரிவித்துள்ளார். (இ-10)

## துப்பாக்கி சூட்டில் மீனவர் காயம்

தென்மராட்சி, ஒக். 9

வடமராட்சிக் கிழக்குக் கடலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயம் அடைந்தார்.

கரவெட்டி துன்னாலையைச் சேர்ந்த முத்து சண்முகதாஸ் (வயது 28) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

அதே சமயம் நாகர் கோயிலைச் சேர்ந்த அருளானந்தம் சிவகுமார் (வயது 22) என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடலில் மீன் பிடிக்கச் சென்று இன்னும் திரும்பி வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நாகர் கோயில் மாமுனையைச் சேர்ந்த காசிப்பிள்ளை சின்னத்தம்பி (வயது 58) என்பவரும் கடலுக்குச் சென்ற சமயம் சனிக்கிழமை காணாமற்போய் இருந்தார். எனினும் அவர் அடுத்த நாள் திரும்பி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## கிண்ணியடியில் மின்கம்பம் சேதம்

கொழும்பு ஒக். 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிண்ணியடி என்ற இடத்தில் கடந்த சனிக்கிழமை பல மின்கம்பங்களும் மின் விநியோகக் கேபிள்களும் புலிகளினால் சேதமாக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதேவேளை — ''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் கிளிநொச்சியில் தாம் கைப்பற்றிய பகுதிகளை பலப்படுத்தி வருகின்றனர் — என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-[illegible])

## ஈழ அகதிகள் குறித்து கருணாநிதி

சென்னை, ஒக். 9

தமிழகம் வரும் ஈழ அகதிகளை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் இருப்பதாக தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார். (இ-3)

# கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்

கல்லூரியின் புதிய அதிபர்

## திரு. பொ. கமலநாதன்

அவர்களை வரவேற்கும் முகமாக வழங்கும்

# மதியபோசன விருந்து

இவ்வைபவத்தில் கலந்துகொள்ள விரும்பும் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் 15-10-1996 புதன்கிழமைக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

அன்பளிப்பு:- ரூபா **100 - 00**

திரு. S. V. மகேந்திரன்
(பொருளாளர்)
கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.

திரு. ச. ஆனந்தராஜா
(செயலாளர்)
சீ. சீ. ரி. எம்.
பாடசாலை ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.

(8906)

# கண்ணீர் அஞ்சலி

விஞ்ஞான பாடத்தை விதந்துரைத்து நின்று விலங்கியல் பாடத்தில் வல்லமைபெற்று — எம் கல்லூரி வளம் பெற பணிப்பாளராக — நம்மேல் கரிசனை காட்டிய வள்ளல்,

## அமரர் வை. சுந்தரலிங்கம்

அவர்களின் ஆத்மசாந்திக்கு ஆண்டவனை வேண்டி கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் குடும்பத்துக்கும் எமது ஆறுதலைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(சி/3255)

# கண்ணீர் அஞ்சலி

## திரு. வை. சுந்தரலிங்கம் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், விஞ்ஞானம், யாழ். வலயம் 01)

திரு. வை. சுந்தரலிங்கம் அவர்களின் திடீர் மரணத்தைக் கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

யா/ இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (C/3256)

# கண்ணீர் அஞ்சலி

## உயர்திரு வை. சுந்தரலிங்கம் அவர்கள்

வெளிக்களச் செயற்பாட்டில் முன்னோடி
செயன்முறை விஞ்ஞானக் கல்வியில் வழிகாட்டி
நடமாடும் விஞ்ஞானக் கலைக் களஞ்சியம்
ஆசிரியர் தம் இதயங்களை அன்பால் வென்றவர்

ஏன் அழைத்தாய் இறைவா - எம் சுந்தரை?

அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

'விஞ்ஞான ஆசிரிய நண்பர் வட்டம்'

(43104)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் வை. சுந்தரலிங்கம்
(இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ்/வலயம் — 1, விஞ்ஞானம்)

சிரித்த முகம் கொண்ட சுந்தரலிங்கம் எம்போன்
விஞ்ஞான உதவிப் பணிப்பாளர் பலகாலம்
என்ஞான்றும் விஞ்ஞான வளர்ச்சியினை முன்னெடுத்து
தனது தலையாய கடமையாய்க் கருதிய பெருந்தகை
கடமை செய்யும் காலத்தில் கொழும்பில் அன்று
காலன் கவர்ந்த கவலைதரும் செய்தியினைக் கேட்டு
கதிகலங்குகின்றோம், கண்ணீர் சொரிகின்றோம்.

விலங்கியற்துறையினர்.
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

8-10-96
(43102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆயிரம் கெமரூஜ் வீரர் அரசுடன் சேர்ந்தனர்

## கம்போடியாவில் புதிய திருப்பம்

கம்போடியாவில், கம்போடிய அரசுக்கு எதிராக யுத்தம் நடத்திவந்த கெமரூஜ் படையைச் சேர்ந்த 5,000 வீரர்களும், அவர்களது ஆதரவாளர்களும் கெமரூஜில் இருந்து விலகி அரசுடன் சேர்ந்து விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சமாதான முயற்சிகளைப் புறக்கணித்து தொடர்ந்து யுத்தம் செய்து வந்த கெமரூஜ் படைகளின் சடும் போக்கு, தலைவர்களுக்கு இது பெரும் பின்னடைவை ஏற்படுத்தி இருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

சில மாதங்களுக்கு முன்னர் கெமரூஜின் தலைவர்களில் ஒருவரான இயன்சாரி என்பவர் கெமரூஜில் இருந்து விலகி அரசுடன் சேர்ந்தார்.

இதனை அடுத்து பெரும் எண்ணிக்கையான கெமரூஜ் வீரர்கள் கெமரூஜ் இயக்கத்தில் இருந்து விலகிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கம்போடியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்ட போது கெமரூஜ் உட்பட சகல தரப்பினரும் சமாதான ஒப்பந்தத்தில் கைபெழுத்திட்டிருந்தனர்.

ஆனால் அதன் பின்னர் நடைபெற்ற சகல தரப்பினருக்குமான தேர்தலில் பங்குபற்ற கெமரூஜ் மறுத்திருந்தது.

பின்னர் இந்த இயக்கம் தேர்தல் மூலம் பதவிக்கு வந்த அரசுக்கு எதிராக சண்டையை ஆரம்பித்திருந்தது.

1975 — 78 ஆண்டுப் பகுதியில் கம்போடியாவைக் கெமரூஜ் ஆட்சி செய்த காலத்தில் சுமார் 10 இலட்சம் மக்களை அது படுகொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### தேர்தல் முடிவு

இந்தியாவில் அதிக சனத்தொகையைக் கொண்ட உத்தரப் பிரதேச சட்டசபைத் தேர்தல்கள் நேற்று முன்தினம் முடிவுற்றன.

வாக்குகள் எண்ணும் பணி இன்று ஆரம்பமாகிறது. தேர்தல் முடிவுகள் எப்படி அமையப் போகிறதோ என்ற பதற்றம் எல்லா முக்கிய அரசியல் கட்சிகளையும் வாட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

# தாடியை மழித்தால் விரல்கள் வெட்டப்படும்

## தலிபான் எச்சரிக்கை

காபூல், ஒக்ரோபர் 9

ஆப்கானிஸ்தானில் உள்ள ஆண்கள் அனைவரும் தாடி வளர்க்க வேண்டும் எனத் தலிபான் அரசு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் சவரத் தொழில் செய்பவர்கள் எவருக்காவது தாடியை மழித்துச் சவரம் செய்தால் அந்த சவரத் தொழிலாளியின் இரண்டு கைவிரல்கள் உடனடியாக வெட்டி எடுக்கப்படும் என தலிபான் அரசு புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது. (இ-10)

# மருத்துவமனையில் பாப்பரசர் அனுமதி

வத்திக்கான் ஒக் 9

உரோமாபுரியிலுள்ள காமெல் டி மருத்துவ மனையில் சத்திர சிகிச்சைக்காக பாப்பரசர் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

திருத்தந்தையின் அறுவைச் சிகிச்சை வெற்றி பெற உலகின் பல பாகங்களில் சிறப்புப் பிரார்த்தனைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டு முகமது அலி ஆஹா என்பவரால் சுடப்பட்ட திருத்தந்தையை உயிர் பெற வைத்தது இதே காமெல் டி மருத்துவ மனையின் மருத்துவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1981 ஆம் ஆண்டு திருத்தந்தையைக் கொலை செய்ய முயன்று தற்போது ஆயுட் கைதியாய் கிழக்கு இத்தாலியிலுள்ள அங்கோனா சிறையில் வாடும் முகமது அலி ஆஹா திருத்தந்தையின் அறுவைச் சிகிச்சை வெற்றி பெற வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

''அன்புத் தந்தையே! நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். உங்களை இன்னொரு முறை காண ஆசையாக இருக்கிறேன்'' என்று தனது வாழ்த்துக் கடிதத்தில் ஆஹா தெரிவித்துள்ளார். (இ.10)

## உலக அரங்கில்

# பிரியங்கா அடுத்த மாதம் திருமணம்

புதுடில்லி, ஒக் 9

ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா அடுத்த மாதம் திருமணம் செய்ய இருக்கிறார்.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த இந்துவான ரொபர்ட் வதேரா என்பவரையே பிரியங்கா மணம் முடிக்க இருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரொபர்ட் வதேராவின் தந்தையும் தாயாரும் ஆங்கிலோ இந்தியர்கள் என்றும் — தந்தை பித்தளை, கலைப் பொருள்களை விற்கும் பிரபல வர்த்தகர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-150)

## யாழ். குடாநாட்டு நிலைமை

# படையினர் போக்கில் பக்குவம் தேவை; இல்லையேல் 'சாண் ஏற முழம் சறுக்கும்'

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவியான கிருஷாந்தி என்பவர் பரீட்சை எழுதிவிட்டு வீடுதிரும்பிய போது காணாமல் போயுள்ளார். இவரைத் தேடிச் சென்ற இவரது பெற்றோர்களுக்கும் என்ன நடந்தது, என்பது பற்றித் தெரியவில்லை.

இது ஒரு சம்பவம்; இது போன்று பலசம்பவங்கள் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெற்று வருகின்றன என்று அங்கிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலும் குடாநாட்டில் இடம்பெற்று வரும் கைதுகள், ஆள் கடத்தல்கள், மிரட்டல்கள் என்பனபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆள்கடத்தல்கள் மற்றும் கைதாவோர் காணாமல் போவது என்பன இலங்கைக்குப் புதிதல்ல.

கடந்த பல வருடங்களாக பிரதேச வேறுபாடின்றி நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் பல்லாயிரக் கணக்கானோர் காணாமற் போயுள்ளனர்.

வெளிநாட்டுச் செய்திஸ்தாபனங்கள் ஒவ்வொரு முக்கிய சம்பவங்கள் குறித்தும் செய்தி வெளியிடும்போது, அச்செய்திகளின் அடிக்குறிப்பில் இலங்கையின் வடக்கு — கிழக்கு யுத்தம் இதுவரை 50 ஆயிரம் பேரைப் பலியெடுத்துள்ளது எனக் குறிப்பிடுவது வழக்கம்.

யுத்தத்தின் காரணமாகப் பலியானவர்களின் எண்ணிக்கையே 50 ஆயிரம். ஆனால் காணாமல் போனவர்கள், கைது செய்யப்பட்டு எவ்வித தகவல்களும் இன்றி இருப்பவர்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காதது.

யாழ் குடாநாட்டில் அமைதியை ஏற்படுத்தும் விதத்தில் அங்கு புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக அரசு தெரிவிக்கின்றது.

வடக்கே சிவில் நிர்வாகத்தை மேற் கொள்வது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது போன்ற நடவடிக்கைகளுக்காக பல்வேறு திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை மேற் கொள்வது கடினமாக இருப்பதுடன் [illegible] நிவாரணப்பணிகளும் அசாத்தியமாக இருந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக யுத்த பூமியாகவே இருந்து வருகின்றது யாழ். குடாநாடு.

அடிப்படை மனித உரிமைகள், தனிமனித சுதந்திரம் என்பவற்றை மட்டுமல்ல ஒரு நேர்த்தியான வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையுமே யாழ். குடாநாட்டு மக்கள் இழந்து நிற்கிறார்கள்.

### மக்களின் எதிர்பார்ப்பு

அப்பாவிப் பொதுமக்கள் ஓர் அரசியல் தீர்வுக்காக ஏங்கி நிற்கும் அதேசமயம், தமது அன்றாட வாழ்க்கையின் அவலங்கள் நீங்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றார்கள்.

ஆனால் பனைமரத்திலிருந்து வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதையாகவே யாழ்ப்பாண மக்களின் நிலை விளங்குகின்றது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு படையினர் யாழ். குடாநாட்டைத் தம்வசப்படுத்தினர். இதனையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்தும் இடம் பெயர்ந்து சென்ற இலட்சக் கணக்கான மக்கள் மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

ஆனால் ஓர் அமைதியான வாழ்க்கை என்பது இம்மக்களைப் பொறுத்தவரை கானல் நீராகவே இருக்கின்றது.

> யாழ். குடாநாட்டின் நிலைமைகள் குறித்து 'சாண் ஏற முழஞ்சறுக்கும்' அரசியல் தீர்வு முயற்சிகள் என்ற தலைப்பில் செப்ரெம்பர் 29- ஒக்ரோபர் 05 வார ''தினமுரசு'' இதழில் இராஜதந்திரி எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

### சாட்டையடி

இரு மாதங்களுக்கு முன்னர் யாழ்நகரில் எல். ரி. ரி. ஈ தற்கொலைப்படை உறுப்பினர் ஒருவரது குண்டு வெடிப்பையடுத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மயிரிழையில் உயிர் தப்பினார்.

ஆயினும் யாழ்நகர கமாண்டராக இருந்த பிரிகேடியர் ஆனந்த ஹங்கொட அக்குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். அவருடன் வேறு பலரும் கொலையுண்டனர்.

இச் சம்பவமே அரசின் வடபகுதிக்கான சிவில் நிர்வாகப் பணிகளுக்கு ஒரு பெரும் சாட்டையடியாக விளங்கியது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அண்மையில் 'சி. என். என்'' செய்தியாளர் அனித்தா பிரதாபுக்குப் பேட்டியொன்றை வழங்கியிருந்தார்.

அப்பேட்டியில் வடபகுதியில் சிவில் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளவதில் சிக்கல்கள் இருப்பதை ஜனாதிபதி ஒத்துக்கொண்டார்.

யாழ். நகரில்இடம் பெற்ற குண்டு வெடிப்பையடுத்து குடாநாட்டில் புனரமைப்பு வேலைகள் தாமதமடைந்துள்ளன, அங்கு செல்வதற்கு அதிகாரிகள் தயங்குகின்றனர் எனவும் ஜனாதிபதி தமது பேட்டியின்போது குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற அப்பெரும் குண்டு வெடிப்பையடுத்து ஏராளமான தாக்குதல் சம்பவங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அனைவருக்கும் உளநலம் - 09

### சமூகநலம் - சமூகம் நலம் பெற

★ ஆரோக்கியம் என்பது, தனியொருவரது உடல் உள ஆத்மீக நலம் மட்டுமல்லாது, சமூக நலனையும் உள்ளடக்கிய ஒன்றாகவே இருக்கும்.

★ ஒருவர் தன்னைத் தான் ஏற்றுக் கொள்ளக் கூடியவராகவும், அதேவேளை பிறரையும் அவரவர்தம் நிலையில் ஏற்றுக் கொள்ளக் கூடியவராகவும் இருத்தல், சமூக நலனுக்கு இன்றியமையாத ஒன்று.

★ மாறுபட்ட கருத்துக்களுக்கும் மனக்கதவைத் திறந்து வைத்திருத்தல், சமூக நலத்திற்கு உதவும் மாண்புகளுள் ஒன்று.

★ ஒவ்வொருவரும் தன்னெழுச்சி ஊக்கத்தோடும், படைப்பாக்க உந்துதலோடும், அர்ப்பணிப்பு மேன்மையோடும், எல்லோருடனும் உறவு கொள்தலே மேலான சமூக ஊடாட்டம் ஆகும்.

★ தான் வாழும் சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப-சத்தியத்திற்கு அன்றி வேறெதற்கும் அஞ்சாது நின்று - பணிபுரிதலே, சமூக உணர்வின் சாரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சுத்தை வைக்கோல் விற்பனைக்குண்டு. துரைஐயா, பிள்ளையார் கோவிலடி, நவற்கிரி, புத்தூர். (43076)

தையல் மெசின், றலி சைக்கிள், மிருதங்கம், மலோடிக்கா, ரைப்றைற்றர், T.V., டெக், அன்ரனா, பலதரப்பட்ட வீட்டுத்தளபாடங்கள், மின்சாரப் பொருள்கள், செரமிக்கிளாஸ் வகைகள், உடுப்புக்கள் மற்றும் பலதரப்பட்ட பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 226(104), பிரதான வீதி, யாழ்ப்பாணம். (43098)

### மணமகன் தேவை

வடமராட்சியில் மிகவும் வசதிமிக்க உயர் குலத்தைச் சேர்ந்த மெதடிஸ்ற் பெற்றோர் தங்களது படித்த அழகிய இருபத்தொரு வயதுடைய ஒரே புத்திரிக்கு முப்பது வயதிற்குட்பட்ட இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வேலைசெய்யும் பட்டதாரி அல்லது தொழிநுட்ப உத்தியோகத்தரான கிறிஸ்தவ மருமகனை விரும்புகிறார்கள். தொடர்பு மே/பா இல. 538, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (43077)

யாழ்ப்பாணம் 40 வயது மதிக்கத்தக்க இளமைத் தோற்றமுடைய பட்டதாரி ஆசிரியைக்கு சைவக்குருக்கள் பரம்பரையிலோ அல்லது பரம்பரைச் சைவப் போசனமுடைய கௌரவமான குடும்பத்திலோ தகுதி வாய்ந்த மணமகன் தேவை: முழு விவரமும் முதற்கடிதத்தில். மே/பா இல. 541, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (43097)

### தேவை

மானிப்பாயில் வசிக்கும் மாணவிக்கு ஆங்கில தட்டெழுத்து, மனையியல் செயற்பாடு, ஆங்கிலம் ஆகியவற்றை கற்பிற்பதற்கு ஆசிரியர் தேவை. தொடர்பு: மே/பா இல: 539, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (43078)

### மணமகள் தேவை

அரசாங்கத்திலிருந்து விலகி தனியார் துறையில் பணியாற்றும் 50 வயது மதிக்கத்தக்க தோற்றமுடைய உத்தியோகத்தருக்கு பெண்தேவை. கல்வியறிவும், பண்பும், நல்லொழுக்கமும் உடையவராயும், சிவந்தநிற அழகுடையவராயும், சைவக் குருக்கள் பரம்பரையாகவோ அல்லது உயர்குல பரம்பரைச் சைவ-போசனகாரராகவோ இருத்தலோடு பொறுப்புக்களற்றவராயும் இருத்தல் வேண்டும். முழு விவரமும் முதற் கடிதத்தில். தொடர்பு: மே/பா இல. 540, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (43092)

### வீடு வாடகைக்கு

சாவகச்சேரி - கண்டி வீதியில் (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கருகில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: இல; B; 23, கச்சாய் றோட், சாவகச்சேரி. (42999)

### புத்தகப்பிரியர்களே

தென்மராட்சியில் பல அரிய நூல்களை இரவல் பெற்று வாசிக்க நாடுங்கள்: லிங் லெண்டிங் லைப்ரரி (Ling Lending Library), இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (43084)

### பொலித்தீன்

3' பொலிததீன் றோலாகவும், சிறுதுண்டுகளாகவும் வாங்கப்படும். மில்க்வைற் (சி-3254)

### கணிதம் / ஆங்கிலம்

O/L இல் Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு 9, 10 உட்பட) 15 வருடங்கள் விடைத்தாள்கள் திருத்திய ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல: 85, சிவன்கோவிலடி' சிவன் மேற்கு வீதி, திருநெல்வேலி. (42979)

## பருத்தித்துறை வர்த்தக சங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 9

பருத்தித்துறை வர்த்தக சங்கம் வாரத்தில் சனிக்கிழமை அரைநாளும், ஞாயிற்றுக்கிழமை முழு நாளும் கடைகளை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளது. (இ)

3 ஆம் தரப்பு மத்தியஸ்தம்:

# அரசின் முடிவு தெரிந்த பின்னரே ஐ. தே. க. தனது கருத்தை வெளியிடும்

இனப்பிரச்சினைத் தீர்வில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு தனது தீர்க்கமான முடிவை வெளியிட வேண்டும். அதன் பின்னரே அது குறித்த தனது முடிவை ஐ. தே. க வெளிப்படுத்தும்.

எதிர்க்கட்சித் தலைவரும், ஐ. தே. க. தலைவருமான ரணில்விக்கிரமசிங்க கட்சியின் விசேட நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது.

மூன்றாம் தரப்பினர் மத்தியஸ்தம் வகிப்பதால் ஏற்படும் நன்மை தீமைகள் குறித்து நன்கு ஆராயப்பட வேண்டும் என்றும் ரணில்விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளும், இலங்கை அரசும் சம்மதம் தெரிவித்தால் இனப் பிரச்சினைத்தீர்வில் மத்தியஸ்தம் வகிக்க தான் தயார் என பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் சமீபத்தில் கொழும்பில் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

## படையினர்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் குடாநாட்டுக்குள் இடம் பெற்றுள்ளன. சிறிதும், பெரிதுமாக தாக்குதல்கள் நடந்துள்ளன. இதில் படையினரும், பொதுமக்களும் பலியாகியுள்ளனர்.

''சூரியகதிர்'' இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு யாழ். குடாநாட்டை படையினர் தம் வசப்படுத்தியிருக்கலாம். ஆனால் குடாநாட்டின் பெரும் பகுதி பூரணமாகப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வரவில்லை என்பதையே அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எல். ரி. ரி. ஈ.யினரின் நடமாட்டம் பல்வேறு இடங்களிலும் காணப்படுகின்றது. அவர்கள் பதுங்கியிருந்து தாக்குதல்களை படையினர் மீது நடத்தி வருகின்றனர்.

தமது உறுப்பினர்கள் குடாநாட்டுக்குள் ஊடுருவியிருப்பதாக எல் ரி. ரி ஈ இயக்கம் அறிவித்துமிருக்கின்றது.

### சலசலத்தால் கூட சுடுவார்கள்

இந்நிலையில் படையினர் மிகவும் விழிப்புடனிருக்கவே செய்வர். யாழ்ப்பாணத்தின் புவியியல் சூழ்நிலைக்குப் பரிச்சயமில்லாத படைவீரர்கள், பனை ஓலைகள் சலசலத்தால் கூட வேட்டுக்களைத் தீர்க்கும் நிலையிலேயே இருப்பர்.

அச்சம், சந்தேகம் என்பன படையினர் மத்தியில் ஏராளமாகவே ஏற்பட்டிருக்குமென்றே நம்பமுடியும்.

### படையினரின் சோதனை

இதன் காரணமாகவே வடக்கே பொதுமக்கள் துகிலுரியப்படாத குறையாக சோதனையிடப்படுகின்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கெரில்லாத் தாக்குதல்கள் என்பது எவ்வடிவத்திலும் நிகழலாம்:

அழகிய பெண்ணொருத்தி ஒய்யாரமாக நடந்து செல்வாள். அவளது நடையழகை கண்வெட்டாது இரசித்து நிற்கும் போது தலையின் பிடரிப்பகுதிக்குள் தோட்டா ஒன்று வேறொரு புறத்திலிருந்து உறுமியபடி ஊடுருவும்.

இது கெரில்லாக்களின் தந்திரத்துக்கு ஓர் உதாரணமாகும்.

வியட்நாமில் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

அமெரிக்கத் துருப்புகள் ஒரு தடவை வியட்நாமில் உள்ள தியேட்டர் ஒன்றில் ஹொலிவூட் படமொன்றை ஆழ்ந்து இரசித்துக் கொண்டிருந்தனர்.

தமது நாட்டிலிருந்து பெருந்தொலைவில், வேறுபட்ட சூழ்நிலையில் இருந்து வந்த அமெரிக்கத் துருப்புகளுக்கு அத்திரைப்படக் காட்சிகள் மனதிற்கு இதமளித்தன.

ஆனால் படம் ஓடிக்கொண்டிருந்த போது தியேட்டருக்குள்ளிருந்த அமெரிக்கப்படையினரின் கால்களில் ஊசிகள் குத்துவது போல் இருந்தது. அத்துடன் தடித்த கேபிள்கள் அவர்களது கால்களுக்குள் அகப்படுவது போன்ற பிரமை ஏற்பட்டது.

இதனையடுத்து, படம் பார்த்துக் கொண்டிருந்த படையினர் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து என்ன? ஏது? என்று பார்க்க முனைந்தனர்.

திரைப்படமும் இடைநிறுத்தப்பட்டது; திரை அரங்கினுள் வெளிச்சமும் போடப்பட்டபோது நூற்றுக்கணக்கில் கொடிய புடையன், நாக பாம்புகள் அத்திரையரங்கினுள் ஊர்ந்து திரிந்து அமெரிக்கப்படையினரைப் பதம் பார்த்துக் கொண்டிருந்தன.

குய்யோ, முறையோ என்று கத்தியவாறு படம் பார்த்த படையினர் திரை அரங்கிலிருந்து முண்டியடித்து வெளியேறினர்.

பாம்புகளைக் கண்ட படையினர் தலை தெறிக்க ஓடினர். அச்சமயம் பாம்புகளால் கடிபட்ட பலர் விஷமேறி மாண்டனர். வேறு சிலர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

திரையரங்கிற்குள் சத்தமில்லாது வியட்கொங் கெரில்லாக்கள் பாம்புகளை விட்ட விடயம் பின்னர் தெரிய வந்தது.

எனவே கெரில்லாத் தாக்குதல்கள் என்பவை நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப் படுபவையாகும்.

இத்தகைய தாக்குதல்களை மிகுந்த அவதானத்துடன் இருப்பதன் மூலமே எதிர்கொள்ள முடியும். இதன் காரணமாக அனைத்தையும் சந்தேகிக்கும் மனநிலை தோன்றுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

### வேலியே பயிரை மேய்ந்த கதை

இருந்த போதிலும் அப்பாவிகளையும், கெரில்லாக்களையும் பிரித்தறியும் விதத்தில் படையினர் நடந்து கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவி கிருஷாந்தி காணாமல் போயுள்ளார். இம் மாணவி படையினரது சோதனைச் சாவடியொன்றில் வைத்தே காணாமற் போனதாகவும், இவரைத் தேடிச் சென்ற இவரது பெற்றோர்களும் பின்னர் காணாமற் போயுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

கெரில்லாக்கள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டிய அதேசமயம் அப்பாவி மக்களையும் பாதுகாக்க வேண்டியது படையினரின் பெரும் பொறுப்பாகும்.

ஆனால் மாணவி கிருஷாந்தியும், அம் மாணவியின் பெற்றோரும் காணாமற் போயுள்ளார்கள் என்று தெரிவிக்கப் பட்டுள்ள விடயம், வேலியே பயிரை மேய்ந்த ஒரு நடவடிக்கையாகவே இருக்கிறது.

அப்பாவி மக்களுடனான உறவுகளில் பாரதூரமான விரிசல்கள் ஏற்படுமானால் படையினரால் ஓர் அந்நியமான சூழ்நிலையில் உறுதியாக நிலைகொள்ள முடியாது.

நொந்து, நொடிந்து போயுள்ள மக்களின் உணர்வுகளை மேலும் புண்படுத்தலாகாது.

அரசாங்கம் அரசியல் தீர்வு காணுவது பற்றிப் பேசிவருகின்றது அத்தீர்வுக்கான சூழ்நிலைகளை களங்கப்படுத்தாமல் பாதுகாக்க வேண்டியது படையினரின் பொறுப்பாகும்.

இல்லையேல் 'சாண் ஏற முழம் சறுக்குவது' போன்றதாகவே இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த அணுகுமுறைகள் அமையும் எனக் கொள்ள முடியும். ★

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 14 — 05 — 1952



உதிர்வு: 09 — 09 — 1996

### திருமதி திரவியம் இராசேஸ்வரி

(மருதங்கேணி, தாளையடி)

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு நெடுந்தூரம் சென்ற எமது குடும்பத் தலைவியின் மறைவின் போது, நேரிலும், கடிதமூலமும் எமக்கு ஆறுதல் நல்கியோருக்கும், சகலவழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று 09-10-96 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

அவ்வொல்லை வீதி,
ஆத்தியடி, பருத்தித்துறை. (43099)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 14 — 08 — 1942



விண்ணில்: 10 — 09 — 1996

### திருமதி பாக்கியம் சிற்றம்பலம்

எம் குடும்ப ஒளிச்சுடராய்
எல்லார்க்கும் இனியவராய்
பண்புடனும் பாங்குடனும் வாழ்ந்து
எமக்கெல்லாம் நல்வழிகாட்டியாய்
இருந்த எம் தெய்வமே!
காரணமேதுமின்றி காலன் உம்மை
காலம் முந்தி அழைத்ததேனோ அம்மா!
காலமெல்லாம் உம் நினைவில் கலங்கி
தவித்து உந்தன் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கிறோம்.

— குடும்பத்தினர்

மாலிசந்தை,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி. (43082)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## பகிடிவதைப் பயங்கரம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குப் புதிதாக அனுமதி பெற்றுள்ள மாணவர்கள் ''ராக்கிங்'' எனப்படும் பகிடிவதையினால்மிக மோசமாகப் பாதிக்கப்படுவது குறித்துக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்த ''ராக்கிங்'' என்ற பகிடிவதை பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் அனேகமாக எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் புதிய மாணவர்கள், தாம் பட்டதாரிகளாகப் போகிறோம் என்ற தலைக்கனம் கொள்ளாது, கீழ்ப்படிவுத்தன்மையும், மூத்த மாணவருக்கு மரியாதை கொடுக்கும் பழக்கமும் உடையவர்களாக இருப்பதற்கான ஒரு இலகு நிகழ்வாகவே இது ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் இப்போது நடைபெறும் பகிடிவதைகள் எந்த நோக்கமும், அர்த்தமும் இல்லாத மனித வதைகளாக இருக்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மூத்த மாணவர்கள் நடத்தும் ''ராக்கிங்'' புதிய மாணவர்களுக்கு உள, உடல் பாதிப்புக்களை உண்டாக்கி அவர்களின் கல்வியைக் கெடுக்கும் அளவுக்குப் படுபயங்கரமாக மாறிவருகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

பல்கலைக் கழக வளாகத்துக்கு அப்பால் வெளியில் — வீதிகளில் — மூத்த மாணவர்கள் வதியும் அறைகளில் — மனிதப்பண்புகளுக்கு ஒவ்வாத இம்சைவதைகள் நடப்பதாகப் பெற்றோர்களும் புதிய மாணவர்களும் கவலை தெரிவிக்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் பாலியல்சம்பந்தப்பட்ட சேட்டைகளால் புதியவர்கள் இம்சிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண மக்களின் உயர்கல்வி நிலையமாகக் கருதப்படுவது யாழ். பல்கலைக்கழகம். அங்கு மாணவர்கள் நடத்தும் அசிங்கங்கள் தமிழ் மக்களின் பண்பாடு பாழ்பட்டுப் போய் விட்டதாகப் பிறருக்கு வெளிக்காட்டும்.

எல்லை மீறிய பகிடிவதையை பல்கலைக்கழக மாணவர்கள் நிறுத்தாவிடில் நிர்வாகம் அதனைத் தடைசெய்து, சம்பந்தப்பட்டோரைவகுப்புகளில் இருந்து வெளியேற்றி, அவர்தம் உயர்கல்வி பாதிப்புற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமுதாயச் சீரழிவா அல்லது குற்றம் புரியும் மாணவரின் உயர்கல்வியா என்று சீர்தூக்கிப் பார்த்தால், சமுதாயம் சீரழிந்து போகாமல் காப்பதற்கே முதலிடம் கொடுக்க நேரிடும்.

பகிடி வதையால் பாதிக்கப்படும் மாணவர்கள், தாம் பழிவாங்கப்படலாம் என்று அஞ்சாது தம் மீதான வதைகளைத்துணிவுடன் நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதும் அவசியம்.

பெற்றோர்களும் இது விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும்.

வளாகத்துக்கு வெளியே இம்சைகளில் ஈடுபடும் இரண்டொரு மாணவரை நீதிமன்றம் செல்ல வைத்தால் 'ராக்கிங்' சித்திரவதையை நிறுத்த வழிபிறக்கும். ஆனால் அதற்கான துணிவு எத்தனை பெற்றோருக்கு உண்டு? தனித்துச் செய்ய முடியாவிடில் ஒன்று சேர்ந்து செயற்படக் கூடாதா?

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடாவிடில், எங்கள் கலாசாரத்திற்கும் சமூக ஒழுங்குகளுக்கும் ஊறுவிளைவிக்கும் பகிடிவதை, மருந்தில்லாத நோயாக - தீராப்பிணியாக — முற்றிச் சமூகத்தைச் சீரழிக்கும்.

# வடபகுதி அரச ஊழியர்களுக்கு

# விசேட ஆபத்து அலவன்ஸ் வழங்குவது தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட விசேட ஆபத்து அலவன்ஸ் கொடுப்பனவுகளை வழங்குவது தாமதமாகும் என்று வடக்கு — கிழக்கு மாகாண சபை பிரதம செயலர் பணிமனை சகல திணைக்களங்களுக்கும் அறிவித்துள்ளது.

இக்கொடுப்பனவுகளை வழங்கத்தேவையான நிதியை உள்ளூராட்சி, மாகாண சபைகள் கூட்டுறவு அமைச்சிடம் வடக்கு—கிழக்கு மாகாண சபை கோரியதாகவும்—

இதற்கான குறை நிரப்பு மதிப்பீட்டுக்கு திறைசேரி அனுமதி வழங்கிய பின்பே நிதி வழங்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்—

இதன் காரணமாக இக்கொடுப்பனவு தாமதமாகும் என்றும் — பிரதம செயலர் பணிமனை அறிவித்துள்ளது. (இ-3-117)

## விமான விபத்தில் 22 பேர் பலி

ரோம், ஒக். 9.

இத்தாலியில் திவ்ரோன் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானம் ஒன்று நேற்று கட்டடங்கள் மீது வீழ்ந்து நொருங்கியது.

இதில் பயணம் செய்த 22 பேர் கொல்லப்பட்டனர்.

ரஷ்யாவால் தயாரிக்கப்பட்ட 'அன்ரனேவ்' ரகத்தைச் சேர்ந்தது இந்த விமானம்.

(இ-10)

# வடக்கு - கிழக்கு கல்வி நிர்வாகம் அடுத்த ஆண்டு முதல் புனரமைப்பு

கொழும்பு, ஒக். 9

வடக்கு—கிழக்கு மாகாணத்தின் கல்வி நிர்வாகம் 1-1-97 முதல் புனரமைக்கப்படவிருக்கிறது.

ஏனைய மாகாணங்களில் இந்தத் திட்டம் 1-1-96 முதல் அமுலுக்கு வந்தது.

பல்வேறுகாரணங்களுக்காக அப்போது வடக்கு — கிழக்கு மாகாணத்தில் இந்தப் புனரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியாதிருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கு — கிழக்கு மாகாணத்தில் 7 மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்

(இ-3)

## பயிற்றப்பட்ட ஆசிரியர் உண்ணாவிரதம் நிறுத்தம்

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இன்று மேற்கொள்ளவிருந்த உண்ணாவிரதம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் சேவையை நிரந்தரமாக்குமாறு கோரி அகில இலங்கை பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் சங்கம் பத்தரமுல்லவில் அமைந்துள்ள கல்வி அமைச்சு வளாகத்தில் இன்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்த இருந்தது.

எனினும் ஜனாதிபதி செயலகத்தின் தலையீடு காரணமாக உண்ணாவிரதம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அச்சங்கத்தின் தலைவர் யல்வெல பஞ்ஞாசேகர தேரர் தெரிவித்தார்.

## நுவரெலியாவில்

## கைதானவர்களில் ஒருவர் வட்டுக்கோட்டை ஆசிரியர்

நுவரெலியாவில் சமீபத்தில் கைதானவர்களில் ஒருவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஆசிரியர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் படிப்பிக்கும் இந்த ஆசிரியர் நுவரெலியாவில் சில முக்கிய பகுதிகளையும் ஹெலிக்கொப்டர் இறங்கும் இடங்களையும் படம் எடுத்துக் கொண்டிருந்த சமயம் கைதானார் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆசிரியரிடமிருந்து பெற்ற தகவலை அடுத்தே ஒரு யுவதி உட்பட மேலும் 5 தமிழர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைதான ஆசிரியருக்கும் புலிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பது தெரிய வருவதாக நுவரெலியா மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-150)

## 'உஹண'வில் வந்த மா பங்கீட்டுக்கு வழங்கப்படும்

''உஹண'' கப்பல் மூலம் உணவுக் கட்டுப்பாட்டுக் கிளைக்கு மா வந்துள்ளதையடுத்து பொது மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் மா வழங்கப்படவிருக்கிறது.

ஓர் அங்கத்தவருக்கு 2கிலோ மா வீதம் அதி உச்சமாக 10கிலோ மா ஒரு குடும்பத்துக்கு வழங்கப்படும் என்றும் —

இந்த விநியோகத்துக்குத் தேவையான மாவை பிரதேச செயலர்களின் சிபார்சுடன் ப. நோ. கூ. சங்கங்கள் உணவு கட்டுப்பாட்டுக் கிளையில் பெற முடியும் என்றும் — மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ப. திலகநாயகம் தெரிவித்தார். (இ-3)

## ஆசிரியர் நேர்முகப் பரீட்சை திட்டமிட்டபடி நடக்குமா?

யாழ்ப்பாணம், ஒக். 9

ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று முதல் மூன்று நாள்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நேர்முகப் பரீட்சையை நடத்த மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியும் மற்றுமொரு மாகாணசபை அதிகாரியும் யாழ்ப்பாணம் வரவிருந்தனர்.

எனினும் இவர்கள் நேற்று மாலை வரை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததுக்கான தகவல் எதுவும் இல்லை என்றுநேற்று மாலை கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மூவர் கொண்ட இந்த நேர்முகப் பரீட்சைக் குழுவில் யாழ். பிரதேச செயலாளர் திரு. க. குணராசாவும் இடம் பெற்றுள்ளார். (இ-3-15)

## ஒய்வூதியருக்குப் பிரச்சினை; ஏற்கிறார் பிரதி அமைச்சர்

### சங்கத்துக்கு அனுப்பிய பதிலில்

யாழ்ப்பாணம், ஒக். 9

இன்றுள்ள நிலையில் ஓய்வூதியர்களின் கொடுப்பனவு மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பதை ஏற்பதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் திரு. அத்தாவுட செனவிரத்தின தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு ஏற்ப ஒய்வூதியர்களின் கொடுப்பனவு உயர்த்தப்படவில்லை என்றும் —

இதனால் ஒய்வூதியர்கள் பெரிதும் கஷ்ட நிலையில் வாழ்வதாகவும் —

அவர்களின் ஒய்வூதியம் உயர்த்தப்பட வேண்டும் என்றும் — வடபிராந்திய ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி. [illegible] ஞானம் பிரதியமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் கோரியிருந்தார்.

இக்கடிதத்தைப் பரிசீலித்த பின்னர் பிரதி அமைச்சர் அவருக்கு அனுப்பிய பதிவிலேயே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-3)

## நாளை

புரட்டாதி 24
வியாழக்கிழமை
திதி: திரயோதசி
மாலை 6.13 வரை.
நட்சத்திரம்: பூரம்
பிற்பகல் 1.06 வரை.
பிரதோஷ விரதநாள்
ராகுகாலம்: 1.32—3 02
சுபநேரம்: 7.32—9.02
[illegible]

## குடாநாட்டு மக்கள் வாழ்வில் மற்றோர் எமன்; மதுபானம்!

துன்ப, துயரங்கள், நெருக்கடிகளுக்கு மத்தியில் எதிர்காலம் எப்படி அமையுமோ என்ற ஏக்கத்துடன் கலங்கி நிற்கும் குடாநாட்டு மக்களின் வாழ்வுக்கு மற்றோர் எமனாக கொடிய அரக்கன் — குடி அரக்கன் — இன்று விஸ்வரூபம் எடுத்து அச்சந் தரும் வகையில் கிளர்ந்தெழுந்து நிற்கின்றான்.

சாராயம், பியர், ஸ்ரவுட் போன்ற போதைகளூட்டும் குடிவகைகள் இன்று சாதாரணமாக பெட்டிக் கடைகளிலும், சந்தைகளிலும், கோயில்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் போன்ற பொது இடங்களுக்கு அருகிலும், வீதிகளிலும், சந்திகளிலும் காட்சிக்கு வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டு அமோகமாக (?) விற்பனை செய்யப்படுகின்றன. மக்களின் அத்தியாவசியப் பொருள்களை விற்கும் சில கடைகளில் கூட முன்னால் ''ஷோ கேஸில்'' இவை அழகுற அடுக்கப்பட்டிருப்பதுதான் ஆக உச்சமான அதர்மமாகும்.

சோடா, மென்பானங்கள் போன்று மதுவும் சாதாரணமான ஒரு குடிவகைப் பொருளே என்ற மனப்பதிவைப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கூட ஏற்படுத்தும் விதத்தில், சோடா போன்று மதுப்புட்டிகள் கடைகளிலும், வீதியோரங்களிலும் வரிசையாக அடுக்கப்பட்டு விற்பனைக்குக் காத்து நிற்கின்றன.

''இளமைக்காலம் தீயசெயல்களை நோக்கி மிக வேகமாக ஈர்க்கப்படுகின்றது''—என்று மனோதத்துவவியலாளர்கள் கூறுகின்றார்கள். எனவே பிஞ்சு மனதில் நஞ்சை விதைப்பது போன்று, மதுவைத் தாராள விற்பனைப் பொருளாக்கி எமது இளஞ் சமுதாயத்தைச் சீரழித்து விடாதீர்கள்.

இலாபந் தரவல்ல — இன்னும் தட்டுப்பாடுள்ள — பல பொருள்களை விற்பனை செய்யக்கூடிய வாய்ப்புகள் இருக்கையில் —

முன்னர் மண்எண்ணெய் விற்பனை நிலையங்கள் வீட்டுக்கு வீடு பெட்டிக்கடைகளாகத் திறந்தது மாதிரி மதுக்கடைகளைத் திறக்க முயல்வது நியாயமானதா?

## வாசகர் திருமுகம்

இதற்கென சட்ட ரீதியாக உத்தரவு பெற்ற இடங்களில், உத்தரவு பெற்ற வியாபாரிகள் விற்பனை செய்வதை எம்மால் தடுக்க முடியாது. அவர்களை விட்டுவிடுங்கள்.

ஆனால் அவற்றுக்குப் புறம்பாக மதுபான விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நமது சமுதாயம் கிளர்ந்தெழ வேண்டிய அவசியமும், அவசரமும் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் நலனோம்பும் அமைப்புகள் இது விடயத்தில் இனிமேலும் மௌனம் சாதிப்பது அழகன்று.

மது விற்பனை செய்யும் கடையில் வேறு பொருள்களைக் கொள்வனவு செய்வதில்லை என்று எமது சமூகத்தவர்கள், பெற்றோர்கள், வீட்டுத் தலைவர்கள், குடும்பத் தலைவிகள் தீர்க்கமாக முடிவு செய்து, அத்தகைய கடைகளைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

இத்தகைய சமூகப் பொறுப்பான கூட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டால் தான் இளஞ் சமுதாயம் நலிவுற்றுப் போகாமல் காப்பாற்ற முடியும்.

நல்லூர். எம். எஸ். சந்திரபோஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை செயலணிக் குழுவுக்கு யாழ். சம்பவங்கள் குறித்து முறைப்பாடு

## அதன் தலைவர் ஜான்ஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.9

மீளக்குடியமர்வின் பின் 94 இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டுவரப்பட்டு மகஸின் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருப்பது குறித்து எமக்கு முறைப்பாடுகள் வந்துள்ளன.

மனித உரிமை செயலணிக் குழுவின் தலைவர் சி. ரீ. ஜான்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்ததாக ''ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மனித உரிமை செயலணிக் குழுவின் கிளை ஒன்றை யாழ். நகரில் திறப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை தாம் எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மனித உரிமை செயலணிக் கிளை ஒன்றை யாழ். குடாநாட்டில் நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகவும்—

இது குறித்து பாதுகாப்பு அமைச்சு செயலாளர் சந்திரானந்த டீ சில்வாவுக்கு தாம் கடிதம் அனுப்பி இருப்பதாகவும் அவர் கூறினார்.

வட பகுதியில் இராணுவ நடவடிக்கை இடம்பெற்று வரும் இவ்வேளையில் முறைப்பாடுகளும் வந்து கொண்டிருக்கின்றன. எல்லோரின் அவசர கவனத்தையும் இவை ஈர்த்துள்ளன. குடாநாட்டில் உள்ள எல்லா அரசு ஏஜன்சிகளுடனும் நாம் பேசி உள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-150)

### 109 தமிழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வசதியின்மை ஆகியவை காரணமாகவே தாம் இந்தியா செல்ல தீர்மானித்ததாகவும்—

தம்மிடம் உள்ள உடைமைகள் அனைத்தையும் விற்று ஒருவருக்கு தலா 8 ஆயிரம் வீதம் பயணத்தின் பொருட்டு படகு ஓட்டிகளுக்கு கொடுத்ததாகவும் — அவர்கள் நீதிபதியிடம் தெரிவித்தனர்.

தாம் செலுத்திய பணத்தைப் பெற்றுத் தருமாறும் அவர்கள் கோரினர்.

'உங்கள் விருப்பம் என்ன?' என்று நீதிபதி அவர்களிடம் வினாவியபோது, சிலர் தாம் கொழும்புசெல்ல விரும்புவதாகவும் மற்றும் சிலர் வெளிநாடு செல்ல விரும்புவதாகவும், தாம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மன்னார் அரச அதிபரிடம் இவர்களை ஒப்படைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ 3)

### வீரவில...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலி.

★ தி. அருந்தவநாதன் — மட்டுவில்.

★ ந. பவிதரன் — அச்சுவேலி.

★ ந. செந்தமிழ்ச்செல்வன் — சுழிபுரம்.

★ அ. ஜெயந்தன் — மல்லாகம்.

★ அ. சயந்தன் — மல்லாகம்.

★ கி. ரட்ணசிங்கம் — புத்தூர்.

★ செ. தயான் — குருநகர்.

★ மா நேசன் — புத்தூர்.

★ தி. அற்புதநாதன் — மட்டுவில்.

★ ச. மகேந்திரன் — மாவிட்டபுரம்.

★ அ. விபுலாநந்தன் — காரைநகர்.

★ க. ரவிக்குமார் — அராலி.

★ க. முருகானந்தன் — கொக்குவில்.

★ பா. ஜெகதாஸ் — உரும்பராய்.

★ சு.ஐங்கரன் — இணுவில் கிழக்கு.

★ சி. ரவிக்குமார் — குப்பிளான்.

★ க. ஜெயக்குமார் — அச்சுவேலி.

★ பா. சுபாதரன் — அராலி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திரு. கு. ஜெயராஜதேவன் முன்னிலையில் 30-8-96 இல் 48 இளைஞர்களும் 13-9-96 இல்37 இளைஞர்களும் 6-9-96 இல் 56 இளைஞர்களும் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஆதரவாக 107 வாக்குகள்

கொழும்பு, ஒக். 9

அவசர கால நிலையை மேலும் ஒருமாத காலம் நீடிக்கும் பிரேரணை வாக்கெடுப்புக்குநேற்றுவிடப்பட்டபோது பிரேரணைக்கு ஆதரவாக 107 வாக்குகளும், எதிராக 82 வாக்குகளும் கிடைத்தன.

இ. தொ. கா. அரசுடன் இணைந்து வாக்களித்தது.

ஐ. தே. க. தமிழர், விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணிஆகியன எதிர்த்து வாக்களித்தன.

புளொட் கூட்டமைப்பு, யாழ். மாவட்ட சுயேச்சை குழுவினரான ஈ.பி.டி.பி பிரதிநிதிகள் வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை. (இ-3)

### நடுநிலைக மோசமான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன் நிரந்தர சமாதான தீர்வு ஒன்று ஏற்பட துணிவுடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு பேராயர் வியன்னி தலைமையில் அண்மையில் நடந்த கண்டி மறைமாவட்ட குருமார் மாநாட்டின் இறுதியில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வடக்கு — கிழக்கு யுத்த விளைவுகள், அழிவுகள் எமக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

நாட்டு நிலைமை குறித்து அக்கறையுடன் கலந்தாலோசித்த பின்பு பொறுப்பு வாய்ந்த கத்தோலிக்க குழுவினர் என்ற வகையில் சகல தரப்பினரையும் நிரந்தரத் தீர்வு ஒன்றினை எட்டும் வகையில் செயற்படுமாறு கோருகிறோம்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### தற்கொலை...

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டனர் என்றும் —

தேடுதல் நடவடிக்கை பெரும் வெற்றி அளித்துள்ளது என்றும் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் தற்கொலைப் படையாளிகளான 25 பெண்களைப் புலிகள் கொழும்புக்குள் அனுப்பி உள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்து, இரவு நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது, 15 பெண்கள் கைதாகி இருப்பதாக மற்றொரு செய்தி தெரிவிக்கிறது. (இ-3)

## யானைகளால் காரைதீவில் பதற்றம் மேலும் அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஒக். 9

கடந்த வாரம் அம்பாறையில் இடம் பெற்ற தமிழ்—முஸ்லிம் கலவரங்களையடுத்து அம்பாறை மாவட்டம் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. எனினும் மக்கள் மத்தியில் பதற்றம் இன்னும் தணியவில்லை.

கடந்த வியாழக்கிழமை இரவு பதினொரு மணியளவில் அம்பாறை மாவட்டம், காரைதீவுப் பகுதிக்குள் எதிர்பாராத விதமாக மூன்று யானைகள் பிரவேசித்தன.

மக்கள் மத்தியில் பதற்ற நிலை நீடிக்கும் நிலையில் யானைகளின் பிரவேசம் பதற்றத்தை மேலும் அதிகரித்ததாக தெரிவிக்கப்பட்டது.

அந்த யானைகள் ஆறு மதில்களை உடைத்தன என்றும்—

ஆனால் விபரீதம் எதுவும் இடம்பெறவில்லை என்றும்—தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## விமானம் மூலம் யாழ். வெங்காயம்

கொழும்பு, ஒக். 9

யாழ்ப்பாணத்தில் கொள்வனவு செய்யப்படும் சின்ன வெங்காயத்தைக் கொழும்புக்கு விமானம் மூலம்அனுப்புவது குறித்து ஆராய்ந்து வருவதாக கூ. மொ. வி. தலைவர் பீற்றர் ஜயசேகரா தெரிவித்துள்ளார்.

கப்பல் மூலம் சின்ன வெங்காயத்தை கொழும்புக்கு எடுத்து வருவதில் சிக்கல் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

வெங்காயத்தை கிலோ 20 ரூபாய் வீதம் கொள்வனவு செய்வதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து விவசாயிகள் பலர் அவற்றை தமது வீடுகளில் பாதுகாத்துவைத்திருப்பது தெரிந்ததே.

படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் யாழ். குடாநாட்டில் கூ. மொ. வி. முகவர்களை நியமிப்பது குறித்து யாழ். அரச அதிபர் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார் என்றும்—

குடாநாட்டில் உள்ள கூ. மொ. வி. சில்லறை விற்பனை நிலையங்களில் 30 பேர் பணிபுரிகின்றனர் என்றும்—

அவர்களுக்கு சம்பளத்தை விட ஆபத்து அலவன்ஸாக நாள் ஒன்றுக்கு 400 ரூபா வழங்கப்படுவதாகவும் பீற்றர் ஜயசேகரா மேலும் தெரிவித்தார். (இ-150)

## கடன் வழங்க வங்கிக்கு இன்னும் அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், ஒக் 9

யாழ் மாவட்டத்தில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளைகள் ஊடாக பொது மக்களுக்கு கடன் வழங்க கொழும்பில் உள்ள வங்கித்தலைமைப் பீடத்திடம் இருந்து இன்னமும் அனுமதி வரவில்லை என்று பிராந்திய அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இலங்கை வங்கிக் கிளைகள் ஊடாக விவசாய மற்றும் சுய தொழில் வாய்ப்புக் கடன்கள் வழங்கப்பட்டு வந்தன என்றும் —

இக்கடன் வழங்கும் திட்டம் கடந்த வருட இறுதியில் நிறுத்தப்பட்டதாகவும் —

மீண்டும் இக்கடனை வழங்க அனுமதி தருமாறு தலைமையலுவலகத்திடம் கோரப்பட்டுள்ளதாகவும் —

இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — வங்கியில் கடந்த காலங்களில் கடன் பெற்றோரில் 90சத வீதமானவர்கள் இன்னமும் கடனை மீளளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## உள்ளக பயிற்சி நீர்கொழும்பில்

கொழும்பு, ஒக். 9

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 54 மருத்துவப் பட்டதாரிகளுக்கான உள்ளக பயிற்சிகள் (கிளினிக்கல் பயிற்சிகள்) நீர்கொழும்பு அரசாங்க வைத்தியசாலையில் வழங்கப்படும்.

இதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையில் கிளினிக்கல் பயிற்சிக்கான வசதிகள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ- 3)

### குடாநாட்டுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தார்.

இராணுவச் செய்தி தொடர்பான தணிக்கை தற்போது நீக்கப்பட்டதால் அனுருத்த ரத்வத்தை தற்போது மீண்டும் அதே கோரிக்கையை விடுத்துள்ளார். (இ)

## தரம் உயரும்

யாழ்ப்பாணம், ஒக். 9

குடாநாட்டில் பனம்சாராய உற்பத்தியை நவீனமயப்படுத்த வடக்கு மீள் குடியேற்ற அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது

இந்தச் சபையின் தலைவர் திரு. சோமபால குணதீர கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த சமயம், யாழ். மாவட்ட பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இது தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தி இருந்தார்.

## மரண அறிவித்தல்

### கந்தையா சங்கரப்பிள்ளை

கைதடி கிழக்கைச் சேர்ந்த கந்தையா சங்கரப்பிள்ளை 8-10-96 செவ்வாய்க்கிழமையன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், கந்தசாமி (எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி) விஜயரத்தினம், கமலாதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிதம்பரப்பிள்ளை, சின்னப்பா, காசிநாதர் (கறுப்பட்ட முறிப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்திராணி, செல்வமலர், அருணாசலம் (கணேசா ஸ்ரோர், கைதடி) ஆகியோரின் மாமனாரும், குகாந்தகி, சிறீஸ்கந்தராசா (லண்டன்), குகாமினி, குகாயினி, குகந்தன், குயிதன், பவனிதன், தனுஷன், தனுசஜா, வக்சலா ஆகியோரின் பேரனும் பத்மயனின் பூட்டனுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (9-10-96) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் கைதடியில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
ச. கந்தசாமி
(மகன்)

கைதடி கிழக்கு,
கைதடி.

(43101)


# அந்தநாள் நெருங்குகிறது
# அதுதான் அடுத்த சனிக்கிழமை

PolioPlus

உங்கள் பிள்ளைகளுக்கு போலியோ வராமல் தடுக்க
தவறாது சொட்டு மருந்து கொடுங்கள்.
சென்ற மாதம் கொடுத்தவர்களுக்கும் கொடுக்காதவர்களுக்கும்
- இருசாராருக்கும் அவசியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2, இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09 - 10 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.